# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., **DHINATH DHALAM** Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 · இதழ் Issue : 087 · வெள்ளிக்கிழமை Friday · 26.06.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode


# 300 அரசு பேருந்துகள் சேவையை முதலமைச்சர் விஜய் தொடங்கி வைத்தார்

## பெரம்பூர் பேருந்தில் பயணம் செய்து ஆய்வு





சென்னை: தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் 300 புதிய பேருந்துகளின் சேவையை சென்னை தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் விஜய்இன்றுதொடங்கி வைத்தார். அதோடு, திடீரெனதனதுதொகுதியான பெரம்பூருக்கு செல்லும் பேருந்தில் ஏறி பயணம் மேற்கொண்டார்.

127.21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 164 டீசல் பேருந்துகள் மற்றும் 136 சிஎன்சி பேருந்துகளின் சேவையை முதலமைச்சர் விஜய் இன்று கொடியசைத்து தொடங்கி வைத்தார். தொடங்கி வைத்தது மட்டுமல்லாமல் அண்ணா சதுக்கத்தில் இருந்து பெரம்பூர் வரை செல்லக் கூடிய 29 A பேருந்தில் ஏறி அவர் பயணம் மேற்கொண்டார்.

பேருந்தில் ஏறியவுடன் ஓட்டுநர் மற்றும் நடத்துநருக்கு வாழ்த்து தெரிவித்த அவர், சரியான சில்லறை கொடுத்து டிக்கெட் வாங்கினார். மேலும் நடத்துநரை அருகில் உட்கார வைத்து அவரிடம் சிரித்தவாறு பேசிக் கொண்டே சென்றார். மேலும், தான் பேருந்தில் பயணம் செய்வதைதனது செல்போனில் வீடியோ வாகவும் அவர் எடுத்து மகிழ்ந்தார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காமராஜர் சாலைவழியாககலங்கரை விளக்கம் வரை சென்று, மீண்டும் அந்த பேருந்திலேயே தலைமை செயலகம் வந்தடைந்தார்.

ஏற்கனவே சுகாதரத் துறை வாகனங்களை தொடங்கி வைத்த போது விஜய் அதனை இயக்கிப் பார்த்தார். அதே போல் 'சிங்கப்பெண்' திட்டத்தின் ரோந்து வாகன சேவையை தொடங்கி வைத்த போதும் அந்த வாகனங்களை முதல்வர் விஜய் இயக்கி பார்த்தார். இன்றைய தினம் 300 புதிய அரசு பேருந்துகள் சேவையைத் தொடங்கி வைத்து அதில் ஒரு பேருந்தில் பயணம் மேற்கொண்டார்.

முதலமைச்சர் விஜய்யுடன் போக்குவரத்துத் துறை அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன் மற்றும் அரசுத் துறை அதிகாரிகள் உடன் சென்றனர். விஜய் போட்டியிட்டு வெற்றி பெற்ற பெரம்பூர் தொகுதிக்கு செல்லும் பேருந்தில் அவர் பயணம் மேற்கொண்டது முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

புதிய பேருந்துகள் சேவை குறித்து தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் அறிக்கை வெளியிட்டிருக்கிறது. அதில், பொதுமக்களின் தேவைக்கேற்ப புதிய வழித்தடங்களை அறிமுகப்படுத்துதல், முன்பு நிறுத்தப்பட்ட பகுதிகளில் மீண்டும் பேருந்து சேவைகளை இயக்குதல், பழைய பேருந்துகளை மாற்றுதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக தெரிவித்திருக்கிறது.

அதன்படி, பொது போக்குவரத்து சேவைகளை மேலும் வலுப்படுத்தும் வகையில், மாநகர் போக்குவரத்து கழகத்திற்கு 65 பேருந்துகள், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் விழுப்புரம் கோட்டத்திற்கு 36 பேருந்துகள், சேலம் கோட்டத்திற்கு 39 பேருந்துகள், கோயம்புத்தூர் கோட்டத்திற்கு 25 பேருந்துகள், கும்பகோணம் கோட்டத்திற்கு 49 பேருந்துகள், மதுரை கோட்டத்திற்கு 42 பேருந்துகள் என மொத்தம் 300 புதிய பேருந்துகளின் சேவையை தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொடியசைத்து துவக்கி வைத்திருப்பதாக தெரிவித்திருக்கிறது.

# தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மொத்த கடன்

# ரூ. 2.47 லட்சம் கோடி; வெள்ளை அறிக்கை வெளியீடு



சென்னை: தமிழ்நாடு மின்சார வாரியத்தின் (TANGEDCO) ஒட்டு மொத்த கடன் ரூ. 2.47 லட்சம் கோடி என எரிசக்தித் துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார் இன்று வெளியிட்ட வெள்ளை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் தவெக தலைமையிலான புதிய அரசு பதவியேற்றநிலையில், மாநிலத்தின் நிதி நிலைமை குறித்த வெள்ளை அறிக்கையை கடந்த 16-ந் தேதி நிதியமைச்சர் மரியவில்சன் வெளியிட்டார். இந்த நிலையில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கடந்த 25 ஆண்டு கால நிதிநிலை, உள்கட்டமைப்பு மற்றும் செலவினங்கள் குறித்த வெள்ளை அறிக்கையை அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல்குமார்இன்றுவெளியிட்டார்.

அதன் முக்கிய அம்சங்கள் வருமாறு:

அதிர வைக்கும் நிதி நெருக்கடி மற்றும் கடன் சுமை

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தற்போதைய மொத்த கடன் ரூ. 2,47,130 கோடி

கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் மின் வாரியத்திற்காக வாங்கப்பட்ட கடன் ரூ. 87,399 கோடி

மின் வாரியத்தின் தற்போதைய நிதி பற்றாக்குறை ரூ. 34,447 கோடி

மின் தேவை மற்றும் உற்பத்தி நிலவரம்

தமிழ்நாட்டின் அதிகபட்ச மின் தேவை 21,300 மெகாவாட்

தமிழ்நாடு மின்சார வாரியம் தற்போது நேரடியாக உற்பத்தி செய்யும் மின்சாரத்தின் அளவு வெறும் 3,495 மெகாவாட் மட்டுமே

மத்திய அரசு மின்தொகுப்பில் இருந்து தமிழகம் 13,566 மெகாவாட் மின்சாரம் பெற்று வருகிறது.

தமிழ்நாட்டின் மின் பற்றாக்குறையை ஈடுகட்ட குறுகிய கால ஒப்பந்தங்கள் மூலம் ஒரு யூனிட் ரூ.6.75 வீதம் வெளிச்சந்தையில் மின்சாரம் கொள்முதல் செய்யப்படுகிறது.

பணியாளர்கள் பற்றாக்குறை

தமிழ்நாடு மின்சாரத் துறை சீராக இயங்குவதற்கு மொத்தம் 1.40 லட்சம் பணியாளர்கள் தேவை

ஆனால், தற்போது வெறும் 74,714 பேர் மட்டுமே பணியில் உள்ளனர் மின்சாரத் துறையில் இன்னும் 65,921 பணியிடங்கள் காலியாக உள்ளன கடந்த 5 ஆண்டு கால திமுக ஆட்சியில் வெறும் 343 பேர் மட்டுமே பணி நியமனம் செய்யப்பட்டனர்

காலிப் பணியிடங்களை நிரப்பும் நடவடிக்கையின் முதற்கட்டமாக, 15,000 பேரை மின்வாரியப் பணியில் அமர்த்த முதலமைச்சர் விஜய் உத்தரவிட்டுள்ளார் தொடர்ந்து அதிகரித்த நிதிப் பற்றாக்குறை

மின்சார வாரியத்தின் வருவாய் மற்றும் செலவினங்களுக்கு இடையே உள்ள இடைவெளி கடந்த 25 ஆண்டுகளில் கணிசமாக அதிகரித்துள்ளது. குறிப்பாக 2016-2021 காலகட்டத்தில் பற்றாக்குறை ரூ. 58,534 கோடியாக உச்சம் தொட்டது.

இருப்பினும், சமீபத்திய 2021-2026 காலத்தில் நிதிப் பற்றாக்குறை ரூ. 34,447 கோடியாகக் குறைந்துள்ளது.

நிர்வாகச் சீர்கேடு மற்றும் ஊழல் புகார்கள்

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூ. 87,399 கோடி கடன் வாங்கப்பட்ட போதிலும், பெரிய உள்கட்டமைப்பு மேம்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லை. மின்சாரத் துறையில் நடந்த முறைகேடுகள் தொடர்பாக லஞ்ச ஒழிப்புத்துறை தீவிர விசாரணை மேற்கொண்டு வருகிறது. தனியார் நிறுவனங்களுடன் ஒப்பந்தம் போடும் போது நடைபெறும் முறைகேடுகளை தடுக்க, சந்தை பகுப்பாய்வுக் குழு (Market Analysis), உற்பத்தியாளர் மதிப்பீட்டுக் குழு (Manufacturer Assessment) மற்றும் குறுக்குச் சரிபார்ப்புக் குழு (Crosscheck Committee) என 3 அடுக்கு சரிபார்ப்பு நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஒழுங்குமுறை சொத்துக்கள் (Regulatory Assets) தொடர்பான ரூ. 59,000 கோடி நிதிச் சுமையை, நுகர்வோர் மீது சுமையாக ஏற்றாமல் அரசால் படிப்படியாகச் சீரமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றும் வெள்ளை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## வரி விளம்பரங்கள்



தினத்தளம்

DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | | |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | |

தொடர்புக்கு : ☎ +919444082959


# "என்னை எங்கேயும் தேட வேண்டாம்..!"

# முதலமைச்சர் விஜய்யின் குட்டி கதைக்கு

# தி.மு.க.தலைவர் ஸ்டாலின் பதில்



திருவாரூர்: தமிழக சட்டப்பேரவையில் விஜய் சொன்ன 'அப்பாவைக் காணோம்' குட்டிக் கதை கடும் அதிர்வலைகளை ஏற்படுத்திய நிலையில், "என்னை எங்கேயும் தேட வேண்டாம்; நான் மக்கள் மனதில் இருக்கிறேன்," என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் பதிலடி கொடுத்தார். பின்னர் விழாவில் ஸ்டாலின் பேசுகையில், "நாட்டில் மின்வெட்டுப் பிரச்சினை, டெல்டா மாவட்டத்தில் குறித்த நேரத்தில் விவசாயி களுக்கு மேட்டூர் அணை தண்ணீர் திறக்க முடியவில்லை போன்ற பிரச்சினைகள் உள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளில் நடைபெற்ற திமுக ஆட்சியில் குறித்த நேரத்தில் மேட்டூர் அணையை திறந்து வைத்துள்ளோம். இவற்றையெல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி சட்டப்பேரவையில் எடுத்துச் சொல்லிப் பேசினார். முதல்வராக உள்ளவர் எதிர்க்கட்சித் தலைவரின் கேள்விகளுக்கு பதில் அளிக்காமல், "எங்கே உங்கள் அப்பாவை காணோம்!" என்கிறார். அப்பாவை அங்கே தேடாதீர்கள். அவர் மக்கள் மனதில் பதிந்திருக்கிறார். சட்டப்பேரவையில் நான் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மக்கள் மன்றத்திலே நான் இருக்கிறேன் என்பதை உங்களிடத்தில் கூறிக் கொள்கிறேன். மகளிருக்கு கலைஞர் உரிமைத் தொகையாக மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும், புதுமை ப்பெண் திட்டத்தின் மூலம் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும், தமிழ் புதல்வன் திட்டம் போன்ற திட்டங்களில் எல்லாம் நான் கையெழுத்துள்ளேன் அங்கெல்லாம் நான் இருக்கிறேன். என்னை தேடிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. மக்களோடு தான் இருக்கிறேன். அண்ணா தமிழ்நாட்டுக்கு தமிழ்நாடு என்று பெயர் வைத்தது ஒன்றே போதும், இந்த தமிழ்நாடு உள்ளவரை நான் தான் முதல்வர் என்று சொன்னதைப் போல, மகளிர் உரிமை திட்டம் இருக்கும் வரை இந்த ஸ்டாலின்தான் முதல்வர், கருணாநிதி கூட்டணி அமைத்தால் கூட்டணி கட்சியை பாதுகா ப்பாக வைத்திருப்பார், அவர்களாகத்தான் கூட்டணியை விட்டு போ வார்களே தவிர, வெளியேற்ற மாட்டார். அந்த வழியில்தான் நான் கூட்டணியை பாதுகாத்தேன். ஆனால் கூட்டணியே வேண்டாம் எனவும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் அதனையும் பரிசீலிப்போம்," என்றார்.


## செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வருவாய் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் கீழே கிடந்த ரூபாய் 12,000 ஆயிரம் பணம் மற்றும் ஆவணங்களை எடுத்து உரியவரிடம் ஒப்படைத்த செம்மணங்கூர் கிராமத்தைச் சேர்ந்த கூலித் தொழிலாளி ரங்கநாதன் என்பவரை காவல்துறையினர் நேரில் வரவழைத்து சால்வை அணிவித்து அவரின் மனிதநேயமிக்க செயலை பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர்.



விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் அருகே மேலமங்கலம் கிராமத்தில் வெங்கடேசன் என்பவரின் வீடு தீப்பற்றி எரிந்து சேதமடைந்தது. இதனை அறிந்த திருக்கோவிலூர் அதிமுக சட்டமன்ற உறுப்பினர் பழனிச்சாமி நேரில் சென்று பார்வையிட்டு பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

# இரயில்வே தேர்வு வாரியத்தால் (RRB) நடத்தப்படும் ASISTANT LOCO PILOT தேர்விற்கு 11,127 காலிப்பணியிடங்களுக்குரிய அறிவிப்பு

## ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தகவல்



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு

இரயில்வே தேர்வு வாரியத்தால்(RRB)நடத்தப்படும் ASISTANT LOCO PILOT தேர்விற்கு 11,127 காலிப்பணியிடங்களுக்குரியஅறிவிப்பு21.03.2026 அன்று வெளியிடப்பட்டது. இப்போட்டித் தேர்வுகளுக்கான இணையவழி (மாலை 6 மணி முதல்8மணிவரை)இலவச பயிற்சி வகுப்புகள் விரைவில் ஈரோடு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தால் தொடங்கப்படவுள்ளது. இப்பயிற்சி வகுப்பில் நாள்தோறும் சிறுதேர்வுகள் (Spot test), வாராந்திர தேர்வுகள், பாடவாரியான தேர்வுகள், முழு மாதிரித் தேர்வுகள் இணைய வழியாக நடத்தப்பட உள்ளது. இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் தங்களது விவரங்களை https://forms.gle/1BGqkP74mSTXbEhY7 என்ற Google Form link-இல் பூர்த்தி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கடந்த ஆண்டு இவ்வலுவலக தன்னார்வ பயிலும் வட்டம் வாயிலாக நடத்தப்பட்ட இலவச இணையவழி பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டவர்களில் கூட்டுறவுத் துறை உதவியாளர் பணிக்காலியிடத்திற்கான தேர்வு முடிவுகளில் 30 மாணவர்களும், HEALTH INSPECTOR GRADE-II இணையவழி பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டவர்களில் 42 மாணவர்களும் தேர்ச்சி பெற்று அரசுப்பணி பெற்றுள்ளனர். அதேபோல், 2025 ஆம் ஆண்டில் நடைபெற்ற குரூப் 4 தேர்வில் 7 மாணவர்கள் தேர்ச்சி பெற்று நீதித்துறை, பள்ளிக்கல்வித்துறை, ஊரக வளர்ச்சித்துறை,மாசு கட்டுப்பாட்டு வாரியம் போன்ற பல்வேறு அரசுத்துறைகளில் பணிநியமனம் பெற்றுள்ளனர். TNPSC-Gr-2 முதனிலைத் தேர்வில் 10 மாணவர்கள் தேர்ச்சி பெற்று முதன்மைத் தேர்வு எழுதியுள்ளனர்.

மேலும், தமிழ்நாடு அரசு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் கீழ் செயல்பட்டு வரும், மெய்நிகர்கற்றல் வலைதளத்தில் (VLS) மாணவர்கள் தங்கள் சுய விவரத்தினை USER ID மற்றும் PASSWORD மூலம் பதிவு செய்து,பல்வேறு போட்டி தேர்வுகளுக்கான மென்பாடக்குறிப்புகள், மாதிரித்தேர்வுகள்.தினசரி நடப்பு நிகழ்வுகள், மாதாந்திர நடப்பு நிகழ்வுகளை மாணவர்கள் பதிவிறக்கம் செய்து பயன்படுத்திக்கொள்ளலாம்.

இவ்வாய்ப்பினை ஈரோடு மாவட்டத்தைச் சார்ந்த அனைவரும் பயன்படுத்திக்கொள்ளுமாறு ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கின்றார். மேலும் விவரங்களுக்கு 0424-2275860,9499055943 என்ற தொலைபேசியினை தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

# கேட்போராக இருந்த குழந்தைகளை வாசிப்போராக மாற்றும் முயற்சி தேவகோட்டையில் வாசிப்பு இயக்கப் புத்தகங்கள் வழங்கல்



தமிழக அரசின் பள்ளிக் கல்வித்துறை சார்பில்மாணவர்களிடையே வாசிப்பு பழக்கத்தை மேம்படுத்தும் நோக்கில் செயல்படுத்தப்பட்டு வரும்"வாசிப்பு இயக்கம்" திட்டத்தின் கீழ் விலையில்லா கதைப்புத்தகங்கள் சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப்பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

நிகழ்ச்சிக்கு பள்ளி ஆசிரியை சிவரஞ்சனி வரவேற்புரை வழங்கினார். பள்ளித் தலைமை ஆசிரியர் லெ. சொக்கலிங்கம் தலைமை தாங்கினார். தேவகோட்டை வட்டாரவளமைய மேற்பார்வையாளர் கார்த்திகேயன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு வாசிப்பு இயக்கப் புத்தகங்களை வழங்கினார்.

அப்போது அவர் பேசியதாவது:

"தமிழகஅரசுப்பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1-ம் வகுப்பு முதல் பிளஸ்-2 வரை பயிலும் மாணவர்களின் வாசிப்புத் திறனை வளர்க்கும் நோக்கில் வாசிப்பு இயக்கம் உருவாக்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக 'நுழை', 'நட', 'ஓடு', 'பற' என்ற நான்கு வாசிப்பு நிலைகளுக்கேற்ப சிறப்பாக வடிவமைக்கப்பட்ட கதைப்புத்தகங்கள் அனைத்து பள்ளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

ஒரு கதை - ஒரு புத்தகம் - 16 பக்கங்கள் என்ற அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள இந்த நூல்கள் மாணவர்களின் வயதிற்கும் வாசிப்புத் திறனுக்கும் ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளன. இதுவரை குழந்தைகளுக்கு கதைகளைச் சொல்லிக் கொடுத்தோம்; இனி அவர்கள் தாங்களாகவே கதைகளை வாசிக்கும் நிலையை உருவாக்குவதே இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கமாகும்.

கேட்போராக (Listeners) இருக்கும்குழந்தைகளை வாசிப்போராக (Readers) மாற்றும் அரிய முயற்சியாக வாசிப்பு இயக்கம் திகழ்கிறது. குறிப்பாக அரசுப் பள்ளிகளில் பயிலும் எளிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் கைகளில் சிறிய கதைப்புத்தகங்களை கொண்டுசேர்த்துஅவர்களிடம் சுயவாசிப்பு பழக்கத்தை உருவாக்கும் முன்னோடியான திட்டமாக இது விளங்குகிறது. குழந்தைகள் புத்தகங்களைதொடர்ந்து வாசித்து அறிவை வளர்த்துக் கொண்டு கல்வியிலும், வாசிப்புத் திறனிலும் சிறந்து விளங்க வேண்டும்" என்றார்.

நிகழ்ச்சியின் நிறைவில் ஆசிரியர் ஸ்ரீதர் நன்றி கூறினார். வாசிப்பு இயக்கப் புத்தகங்களை பெற்றுக்கொண்டமாணவர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன்தங்களதுவாசிப்பு அனுபவத்தைத் தொடங்க ஆர்வம் தெரிவித்தனர்.

தமிழக அரசின் இந்த முயற்சி மாணவர்களிடையே வாசிப்பு கலாச்சாரத்தை உருவாக்கி, அறிவார்ந்த சமூகத்தை கட்டியெழுப்பும் முக்கியமான கல்விப் புரட்சியாககல்வியாளர்கள் பாராட்டுகின்றனர்.

## உலகத்தரம் வாய்ந்த அலுவலக வளாகத்தின் அறிமுகத்துடன் கூடிய

# காசா கிராண்ட் கிரவுன் எனும் தனது முதல் வணிக அலுவலக மையத்தை கோவை அவினாசி சாலையில் துவங்கியுள்ளது



உலக தரம் வாய்ந்த அலுவலக வளாகத்தின் அறிமுகத்துடன் கோவையில் கால் பதித்த காசாகிரவுண்ட் நிறுவனம்.அவிநாசிசாலைநவ இந்தியாபகுதியில்,காசா கிரவுன் எனும் தனது முதல் வணிக அலுவலக மையம் அறிமுகபடுத்த பட்டுள்ளது

. இந்த நவீன வளாகத்தில், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், ஐடி நிறுவனங்கள், உலகலாவிய திறன் மையங்கள், ஸ்டார்ட்அப்கள் மற்றும்கார்ப்பரேட்நிறுவனங்கள், அலுவலகங்களுக்கு தேவையான அளவில் சுமார் 1லட்சம் சதுரஅடி பரப்பளவில் உருவாகியுள்ளது.

காசாகிரவுண்ட் குழுமத்தின் வணிக ரீதியிலான ரியல் எஸ்டேட் பிரிவு, கோவை சந்தையில் தங்களது முதல் வணிக ரியல் எஸ்டேட்டை துவங்கியுள்ளது. வேகமாக வளர்ந்து வரும் வணிக நகரங்களில் கோவை முக்கியபங்காற்று கின்றது. இங்கு எதிர்கால தேவைகளை கருத்தில் கொண்டு வடிவமைக்கப்பட்ட இந்த வளாகத்தில், நவீன கட்டிடக்கலை, திறன்மிக்க தள அமைப்புகள், நிலைத்தன்மை கொண்ட உட்கட்டமைப்பு பொது பயன்பாட்டு சிற்றுண்டி சாலை,மற்றும் பணியாளர்களை மையமாக கொண்ட பல்வேறு வசிதிகள் இங்குஇடம்பிடித்துள்ளது. மேலும் இது குறித்து காசாகிராண்ட் குழுமத்தின் துணை நிர்வாக இயக்குநர் சிவசங்கர்ரெட்டி செய்தியாளர்களிடம் கூறியதாவது..

வலுவான போருளாதார அடித்தளத்தையும், தரமான வணிக உட்கட்டமைப்பிற்கான தேவைகள் அதிகரித்து வருகின்றது. இதனை முழுமையாக நீக்கும் வகையில், காசாகிராண்ட் நிறுவனம் இந்த காசாகிராண்ட் கிரவுன் எனும் வணிக வளாகத்தை அறிமுகம் செய்துள்ளது, கோவையில் காசாகிராண்ட் கமர்சியலின் வருகை, அதன் வளர்ச்சிப் பயணத்தில், மற்றும் ஒரு முக்கிய மைல்கல்லாக அமைந்ததுடன், அதீத வளர்ச்சி வாய்ப்புள்ள சந்தைகளில், உலகத்தரம் வாய்ந்த வணிக சூழல்களை உருவாக்கி, நிறுவனத்தில் உறுதிப்பாட்டை மேலும் வலுப்படுத்துகிறது என்றார்.

# நந்தா சித்த மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் முதலாவது பட்டமளிப்பு விழா



நந்தா கல்வி நிறுவனங்களின் கீழ் இயங்கி வரும் இந்திய மருத்துவக் கல்லூரிகளில் ஒன்றான நந்தா சித்த மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் முதலாவது பட்டமளிப்பு விழா சீறும் சிறப்புமாக இனிதே நடைப்பெற்றது. இவ்விழாவில் தேசிய ஆணையத்தின் யுனானி, சித்தா மற்றும் சோவாரிக்பா பிரிவின் முன்னாள் தலைவர் மருத்துவர் கே. ஜெகநாதன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

இவ்விழாவிற்கு ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி. சண்முகன் தலைமையேற்று உரையாற்றுகையில், ஒரு கல்வி நிறுவனத்தின் முதல் பட்டமளிப்பு விழா என்பது வரலாற்று சிறப்பு வாய்ந்ததாகும். இத்தகைய பெருமைமிக்க நேரத்தில் பட்டம் பெறும் மாணவர்களுக்கும், அவர்தம் பெற்றோர்களுக்கும் தனது நன்றி கலந்த வாழ்த்துக்களைத் தெரிவித்தார். முன்னதாககல்லூரியின்முதல்வர் மருத்துவர் எம். மேனகா அவர்கள் ஆண்டு அறிக்கையினை வாசித்தார்.சிறப்புவிருந்தினர்சோவாரிக்பாபிரிவின் முன்னாள் தலைவர் மருத்துவர் கே. ஜெகநாதன் அவர்கள் தரவரிசையில் இடம் பெற்ற 3 மாணவர்கள் உட்பட 50 மாணவ-மாணவியர்களுக்கு பட்டங்களை வழங்கி பேருரையாற்றினார். அப்போது கூறுகையில், முதலில் இப்பெருமைமிகு கல்லூரியின் வாயிலாக முதலாவதாக பயின்று வெளியோரும் மாணவ-மாணவியர்களுக்கு பட்டங்களை வழங்கியதில் மிகுந்த மகிழ்ச்சியடைவதாகக் கூறினார். மேலும்அகஸ்திய முனிவர்கள் தந்தருளிய இயற்கை ஆதாரங்களை மென்மேலும் பாதுகாத்து, சிகிச்சை மற்றும் சமூக சேவையினை உயர்வானதாகக் கருதி காக்கவேண்டும் என்று இளம் மருத்துவர்களை வலியுறுத்தினார். இதனைத் தொடர்ந்து, மருத்துவர்தகுதிக்கானபட்டம் பெற்ற மாணவ- மாணவியர்கள் உறுதி மொழி எடுத்துக் கொண்டார்கள். மேலும் இவ்விழாவில் ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன், இணை நிர்வாக அறங்காவலர்களான எஸ். நந்தகுமார் பிரதீப், எஸ். திருமூர்த்தி, முதன்மை நிதி அலுவலர் ஏ. சிவப்பிரகாசம் மற்றும் கல்லூரியின் நிர்வாக அலுவலர் முனைவர் ஜீ. தர்மராஜ் ஆகியோர் கலந்து கொண்டு பட்டம் பெற்ற மாணவர்களை வாழ்த்தி பேசினார்கள்.

# தொடர்ந்து தங்கம் விலை வீழ்ச்சி: பவுனுக்கு ரூ.1,680 குறைவு



சென்னை: தங்கம் விலை தொடர்ந்து மூன்றாவது நாளாக குறைந்திருக்கிறது. அந்த வகையில் (வியாழக்கிழமை), சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கம் விலை பவுனுக்கு ரூ.1,680 குறைந்துள்ளது.

சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், கச்சா எண்ணெய் விலை, அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு,தங்கத்தின் மீதான முதலீடு, உலக பங்குச் சந்தை செயல்பாடு உள்ளிட்டவற்றின் அடிப்படையில் தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது.

கடந்தமாதம்(மே)தங்கத்தின் மீதான சுங்க வரியை 6 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக மத்திய அரசு உயர்த்தியது. அதையடுத்து தங்கம்விலையில்தொடர்ந்து மாற்றம் ஏற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இதனால் ஏறுவதும், இறங்குவதுமாக ஊசலாட்டத்தில் இருக்கும் தங்கம் விலை நேற்று குறைந்தது. 22 காரட் தங்கம் விலை கிராமுக்கு ரூ.210 குறைந்து ஒரு கிராம் ரூ.13,350-க்கும், பவுனுக்கு ரூ.1,680 குறைந்து ஒரு பவுன் ரூ.1,06,800-க்கும் விற்பனை. செய்யப்பட்டது.

தொடர்ந்து இன்றும் தங்கம் விலை அதிரடியாக குறைந்துள்ளது. அதன்படி இன்று ( ஜூன் 25) சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு மீண்டும் ரூ.1,680 வரை குறைந்து, ஒரு சவரன் ரூ.1,05,120-க்கு விற்பனை செய்யப்படுகிறது. அதேபோல், ஒரு கிராம் தங்கத்தின் விலை ரூ.210 குறைந்து, ரூ.13,140க்கு விற்பனையாகிறது.

தங்கம் விலையைப் போலவே வெள்ளியின் விலையும் இன்று சரிவைச் சந்தித்துள்ளது. சென்னையில் ஒருகிராம் வெள்ளியின் விலைரூ.10 குறைந்து, ரூ.230-க்கு விற்பனைசெய்யப்படுகிறது. இந்த தொடர் விலை வீழ்ச்சி, வரவிருக்கும் சுபமுகூர்த்த தினங்களை முன்னிட்டு நகை வாங்கத்திட்டமிட்டிருந்த பொதுமக்களுக்கு பெரும் நிம்மதியை அளித்துள்ளது.

# வெளிநாட்டுக்கு கடத்த முயன்ற 55 ஆயிரம் போதை மாத்திரை பறிமுதல்: 3 பேர் சென்னையில் கைது


டெல்லியிலிருந்து போதை மாத்திரைகள் வாங்கப்பட்டு கூரியர் மூலம் சென்னைக்கு அனுப்பப்பட்டு, பின்னர் அவை வெளிநாடுகளுக்கு விமானம் மூலம் கடத்தப்படுவதாக சென்னை காவல் துறையின் போதைப் பொருள் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவினருக்கு ரகசியத் தகவல் கிடைத்தது. போலீஸார் தீவிர கண்காணிப்பு மற்றும் விசாரணையில் ஈடுபட்டனர். விசாரணையில் டெல்லியிலிருந்து அனுப்பப்பட்ட பார்சல் வியாசர்பாடிக்கு வந்து, அங்கிருந்து திருவல்லிக்கேணியில் உள்ள ஒரு முகவரிக்கு டெலிவரி செய்யப்பட்டிருப்பது தெரியவந்தது. இதையடுத்து போதைப் பொருள் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு போலீஸார், திருவல்லிக்கேணி போலீஸாருடன் இணைந்து திருவல்லிக்கேணி பச்சையப்பன் தெருவில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர். அப்போது சந்தேகத்துக்கிடமான முறையில்வந்த 3 பேரை பிடித்து விசாரித்தனர்.பின்னர், அவர்களிடம் இருந்த பையை சோதனையிட்டனர். அதில் போதை மாத்திரைகள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. விசாரணையில் அவர்கள் வியாசர்பாடி காந்திஜி நகர் 2-வது தெருவைச் சேர்ந்த சையது அபுதாஹிர் (50), சேப்பாக்கத்தைச் சேர்ந்த முகமது ரத்தீஸ் (44), திருவல்லிக்கேணி முத்தருன்னிஸா பேகம்தெருவைச்சேர்ந்த முஜாஹிதீன்(31)என்பது தெரியவந்தது.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச்சேவைகள் துறை, மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு சார்பில் நடைபெற்ற போதைப்பொருள் தடுப்பு மற்றும் எதிர்ப்பு தின விழிப்புணர்வு நிகழ்ச்சியில் அமைக்கப்பட்டிருந்த கருத்துக்காட்சி அரங்கில் மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகின் கீழ் செயல்படும் குழந்தைகள் இல்லத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களின் படைப்புகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (25.06.2026) பார்வையிட்டு, கலந்துரையாடினார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி, மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் உமாமகேஸ்வரி, மாவட்ட வழங்கல் அலுவலர் ராம்குமார் உட்பட பலர் உள்ளனர்.



மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், செக்கானூரணியில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் அரசினர் கள்ளர் மாணவியர் இல்லத்திற்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது மாணவியர்குக்கு வழங்கப்பட்டு வரும் அடிப்படை வசதிகள், தங்குமிட வசதிகள், குடிநீர், கழிப்பறை உள்ளிட்ட வசதிகள் குறித்து கேட்டறிந்தார்.மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.அ.கல்லாணை அவர்கள், உசிலம்பட்டி சட்டமன்ற உறுப்பினர் திரு. ம.விஜய் அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்




ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் வருவாய் கோட்டாட்சியராக பணியாற்றிய சிவானந்தம் பணி மாறுதல் காரணமாகப் புதிய கோட்டாட்சியராக சிந்துஜா பொறுப்பேற்றுக்கொண்டார். இதற்கு முன்பு இவர் ஈரோடு வருவாய் கோட்டாட்சியராகப் பணிபுரிந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. புதிய கோட்டாட்சியராகப் பொறுப்பேற்றுள்ள சிந்துஜாவிற்கு அரசு அலுவலர்கள் தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

# சுரண்டை சிவகுருநாதபுரத்தில் ஸ்ரீ அண்ணாமலையார் கோவில் அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் கோலாகலம்



தென்காசி மாவட்டம் சுரண்டை சிவகுருநாத புரம், ஸ்ரீ அண்ணாமலை நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அம்பிகா சமேத ஸ்ரீ அண்ணா மலையார் திருக்கோவிலில் நூதன ஆலய அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா வெகுவிமரிசையாக நடைபெற்றது.

விழாவையொட்டி அதிகாலை முதலே கோவில் வளாகத்தில் ஆன்மிக நிகழ்ச்சிகள் தொடங்கின.

சுரண்டை சிவன் கோவில் ஸ்தானிகரும், சிவாகம சிரோன்மணி, சிவாகம ரத்னாவுமான சிவஸ்ரீ எம். மணிகண்டன் தலைமையில் 36 சிவாச்சாரியார்கள் மற்றும் ஸ்ரீ அண்ணாமலையார் ஈஸ்வரர் திருக்கோவில் அர்ச்சகர் சங்கரன் ஆகியோர் வேத மந்திரங்கள் முழங்க யாகசாலை பூஜைகளை நடத்தினர்.

இதனைத் தொடர்ந்து பல்வேறு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

மங்கள வாத்தியங்கள் முழங்க, சிவாச்சாரியார்கள் புனித கலச நீரை கோபுர கலசங்களிலும், மூலவர் மற்றும் பரிவார தெய்வங்களின் விமானங்களி லும் ஊற்றி மஹா கும்பாபிஷேகத்தை நடத்தினர்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மகா தீபாராதனை நடைபெற்றது.

இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி மற்றும் அம்பாளை தரிசனம் செய்து அருள்பெற்றனர்.

பக்தர்களுக்கு அன்னதானமும், பிரசாதமும் வழங்கப்பட்டது.

விழாவிற்கான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகக் குழுத் தலைவர் வைரமுத்து, செயலாளர் ஏ.எம். சமுத்திரம், பொருளாளர் சமுத்திரம், துணைத் தலைவர் இலட்சுமணன், துணைச் செயலாளர் மாரியப்பன் மற்றும் நிர்வாகக் குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர். இந்த மஹா கும்பாபிஷேகவிழா சிவகுருநாதபுரம் மற்றும் சுற்றுவட்டார பகுதி மக்களிடையே மிகுந்த ஆன்மிக எழுச்சியை ஏற்படுத்தியதுடன், பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

# ஈரோடு கலெக்டர் ச.கந்தசாமி சவுதி அரேபியாவில் உயிரிழந்த தொழிலாளியின் குடும்பத்திற்கு ரூ.3.42 இலட்சம் இழப்பீட்டுத் தொகையினை வழங்கினார்



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி சவுதி அரேபியாவில் உயிரிழந்த தொழிலாளியின் குடும்பத்திற்கு ரூ.3.42 லட்சம் இழப்பீட்டுத் தொகையினை நேற்று (25.06.2026) வழங்கினார்.

ஈரோடு மாவட்டம், வீரப்பன்சத்திரம், நாராயணவலசு பகுதியைச் சேர்ந்த திரு.செங்கதிர் சாமிக்கண்ணு அவர்கள் சவுதி அரேபியாவில் பணிபுரிந்தபோது உடல்நலக்குறைவால் (17.06.2025) உயிரிழந்த நிலையில், அவருக்குரிய சட்டப்பூர்வ நிலுவை த் தொகை, பணி நிறைவு பலன்கள் மற்றும் இறப்பு இழப்பீட்டுத் தொகையாக ரூ.3,42,371/- (ரூபாய் மூன்று இலட்சத்து நாற்பத்து இரண்டாயிரத்து முந்நூற்று எழுபத்து ஒன்று மட்டும்) இந்திய தூதரகம், ரியாத் மூலம் ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு பெறப்பட்டது. விசாரணையில், காலஞ்சென்ற இத்தொகையை சட்டப்பூர்வ வாரிசுதாரர்களுக்கு வழங்குவது செங்கதிர் சாமிக்கண்ணுவின் மனைவி ஷீலா, மகள்கள் பிரீத்தா மற்றும் பிரியா, பெற்றோர் மாசிலாமணி மற்றும் சாமிக்கண்ணு ஆகியோர் சட்டப்பூர்வ வாரிசுதாரர்கள் என்பது உறுதி செய்யப்பட்டது. மேற்படி தொகையை ஷீலாவிற்கு வழங்குவதற்கு மற்ற வாரிசுதாரர்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து, சவுதி அரேபியாவில் உயிரிழந்த தொழி லாளி செங்கதிர் சாமிக்கண்ணுவின் குடும்பத்தி ற்கு வழங்கப்பட வேண்டிய ரூ.3,42,371/- இழப்பீட்டுத் தொகையை அவரது மனைவி ஷீலாவிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி வழங்கினார்

## கோவை வ.உ.சி. பூங்கா மைதானத்தில் நடைபெற்று வரும் அரசு பொருட்காட்சியில்

# முதியோர்கள், மாற்று திறனாளிகள், மனநலம் குன்றியவர்கள் என 200 நபர்களை அழைத்து வந்த தமிழ்நாடு பொருட்காட்சி வியாபாரிகள் நலச்சங்கத்தினர்



கோவையில் கோடைகாலத்தில் பொதுமக்களின் மிகபெரிய பொழுதுபோக்கு என்ற நம்பிக்கை பெற்ற அரசு பொருட்காட்சி

கோவை வ.உ.சி பூங்கா மைதானத்தில், ஜூன் 9ம் தேதி துவங்கியது. தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பாக நடத்த படும் இநுத பொருட்காட்சியை கான ஆண்டு தோறும் லட்சகணக்கான பொதுமக்கள் வந்து செல்வதுண்டு இந்த நிலையில், கோவை மாவட்ட ஆட்சியரின் வழிகாட்டுதலின் படி, கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக, தொடர்ந்து அரசு பொருட்காட்சிக்கு, மாற்று திறனாளிகள், குழந்தைகள், முதியவர்கள், மனநிலை பாதிக்கப்பட்டவர்களை அழைத்து வந்து அவர்களையும் ஒரு குழந்தையாக பாவித்து மகிழ்ச்சியடைய செய்யும் செயல்களை, தமிழ்நாடு பொருட்காட்சி வியாபாரிகள் நலச்சங்கத்தினர் செய்து வருகின்றனர். இதனைதொடர்ந்து இந்த ஆண்டு ஸ்வதர்மா அறக்கட்டளை, ஹெல்பிங் ஹார்ட்ஸ் அறக்கட்டளையில் வசிக்கும் 200க்கும் மேற்பட்ட, முதியோர்கள், குழந்தைகள், மாற்று திறனாளிகள், மனநலம் குன்றியவர்களை அழைத்து வந்து, அவர்களின் கனவுகளையும்நினைவாக்கினர். நுழைவுத் கட்டணம் முதல் அவர்களின், விளையாட்டு கட்டணம், பொருட்காட்சி அரங்குகளை பார்வையிடும் கட்டணம், திண்பண்டங்களுடன், இரவு உணவு வரை அவர்களுக்கு செய்து அவர்களின் கனவை நினைவாக்கி உள்ளனர் தமிழ்நாடு பொருட்காட்சி வியாபாரிகள் நலச்சங்கத்தினர். அவர்கள் ராட்டினத்தில் சுற்றியபடியும், ஸ்னோ வேர்ல்டில் குளிரில் நடுங்கியபடியும், உணவு கடைகள், பிளாஸ்டிக் பொருட்கள், வீட்டுக்கு தேவையான பொருட்களை கண்டு ரசித்தும் இன்றைய நாளை மகிழ்ச்சியாக அவர்கள் களித்ததுடன் இதனை ஏற்பாடு செய்து தந்த அனைவருக்கும் நன்றிகளையும் கூறினர்

நினைவாக்க உறுதுணையாக இருந்த, செய்தி மக்கள் தொடர்பு துறை, கோவை மாவட்ட நிர்வாகம், தமிழ்நாடு பொருட்காட்சி வியாபாரிகள் நலச்சங்க நிர்வாகிகளுக்கு நன்றிகளை தெரிவித்தனர். இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு பொருட்காட்சி வியாபாரிகள் நலச்சங்க நிர்வாகிகளான, ஆர்.எம்.ரபிக், ஏர்டெல்அபு, அபு, ஸ்னோ வேர்ல்ட் இஸ்மாயில், அம்யூஸ்மென்ட் மோகன், டெல்லி அப்பளம் பாபு, ஜக்ரியா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியின் நெருங்கிய நண்பர் வீட்டில் லஞ்ச ஒழிப்புத்துறை சோதனை



முன்னாள் அமைச்சர் எ.வ. வேலுவுக்கு தொடர்புடைய இடங்களில் லஞ்ச ஒழிப்புத்துறையினர் சோதனை நடத்தி வரும் நிலையில், அதன் தொடர்ச்சியாக கரூரிலும் செந்தில் பாலாஜியின் நெருங்கிய நண்பர் எம்.சி.சங்கர் ஆனந்த் வீட்டில் லஞ்ச ஒழிப்புத்துறைசோதனை நடைபெற்று வருகிறது. கரூர் பழனியப்பா தெருவில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வரும் திமுக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியின் நெருங்கிய நண்பரும், அரசு ஒப்பந்ததாரருமான எம்.சி.சங்கர் ஆனந்த் வீட்டிற்கு இரண்டு வாகனங்களில் வந்த லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் சின்ன ஆண்டாங் கோவில் சாலையில் உள்ள கார்த்தி என்பவர் வீடு மற்றும் பள்ளப்பட்டி ஆசாத் நகர்பகுதியில்சென்னை உதவி கோட்ட பொறியாளராக பணியாற்றும் ரபிக் என்பவர் வீட்டிலும், லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

சுமார்20பேர்கொண்ட அதிகாரிகள் குழு கரூரில் முகாமிட்டு பல்வேறு இடங்களில் விசாரணை மேற்கொண்டு வருவதாக முதல் கட்ட தகவல் வெளியாகியுள்ளது.

எந்தப் புகாரின் அடிப்படையில்இந்தசோதனை நடத்தப்படுகிறது என்பது குறித்து அதிகாரப்பூர்வ தகவல் இதுவரைவெளியாகவில்லை. சோதனை நிறைவடைந்த பின்னர் கூடுதல் விவரங்கள் தெரியவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கோவை நீலாம்பூர் பகுதியில் உள்ள ராயல் கேர் மருத்துவமனை

# 7 வயது சிறுவனுக்கு உயிர் காக்கும் இதயமாற்று அறுவை சிகிச்சையை செய்து, சிறுவனின் வாழ்க்கையை மீட்டு தந்துள்ளதாக சிறுவனின் பெற்றோர் நெழிச்சியுடன் கூறினார்



இதய தசைகள் பலவினமடைந்து இதயத்தின் செயல் திறன் குறையும் நோயால் பாதிக்கப்பட்ட ஏழு வயது சிறுவன், நோய் முற்றிய நிலைக்கு சென்ற பின்னரே அது குறித்து அவர்களது பெற்றோர் அறிந்து பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை அளித்தனர். ஆயினும் எந்த மருத்துவமனையிலும் சிகிச்சை பலனளிக்காத நிலையில், கோவை நிலாம்பூர் பகுதியில் உள்ள ராயல்கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டார், சிறுவனை மருத்துவமனையில் ஆய்வு செய்த, இதய மற்றும் ரத்தநாள அறுவை சிகிச்சை நிபுணர், டாக்டர் பிரதீப், சிறுவன் கடுமையான இதய செயலிழப்பு நிலையில் உள்ளதாகவும், உடனடியாக அவருக்கு தீவிர மருத்துவ சிகிச்சை மற்றும் வென்டிலேட்டர் உதவிகள் அளிக்கப்பட்டதாகவும், உடல்நிலை மிகவும் மோசம் அடைந்து, சிறுநீரக செயல்பாடுகள் ஏற்பட்டதுடன், பல்வேறு உறுப்புகளிலும் சிக்கல்கள் உருவாகியது. ஆயினும் உயிரைக்காக்கும்கடைசி முயற்சியாக அவருக்கு, மேம்பட்ட இதயம், நுரையீரல் ஆதரவு கருவி பொருத்தப்பட்டது. இந்த காலகட்டத்தில் அவருக்கு வலது நுரையீரல் கடுமையான தொற்று மற்றும் நுரையீரல் சுருங்கும் நிலையும் ஏற்பட்டது, சிறுவனின் உடல் எடை மற்றும் உடல் அளவிற்கு ஏற்ற வகையில் இதயத்தை தானமாக தரக்கூடிய நபரை கண்டுபிடிப்பது மிகப் பெரிய சவாலாக அமைந்தது. நீண்ட கால காத்திருப்புக்குப் பின்னர் மூளை சாவு அடைந்த ஒரு 30 வயது நபரிடம் இருந்து இதயம் கிடைத்தது எனவும், அந்த இதயத்தை சிறுவனுக்கு பொருத்தும் கடினமான சவாலை மருத்துவ குழு ஏற்று சுமார், 8 மணி நேரம் முதல் 10 மணி நேரம் வரை அறுவை சிகிச்சை செய்து சிறுவனின் உயிரை காப்பாற்றி உள்ளதாகவும், ஆபத்தான நிலையில் இருந்த சிறுவனை மீட்டு சிறுவனை காப்பாற்றியதாக மருத்துவர் தெரிவித்தார். தற்பொழுது சிறுவன் நல்ல நிலையில் இருப்பதாக தெரிவித்த சிறுவனின் தந்தை அறுவை சிகிச்சை செய்த மருத்துவக்குழுவினருக்கு மனமுருகி நன்றிகளை தெரிவித்தார். தொடர்ந்து இதனை செய்து முடித்த மருத்துவ குழுவினருக்கு ராயல் கேர் மருத்துவமனையின் நிர்வாக இயக்குனர் டாக்டர் மாதேஸ்வரன் வாழ்த்துக்களை தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச்சேவைகள் துறை, மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு சார்பில் நடைபெற்ற போதைப்பொருள் தடுப்பு மற்றும் எதிர்ப்பு தின விழிப்புணர்வு நிகழ்ச்சியில் சிறப்பு உதவி காவல் ஆய்வாளர் அவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (25.06.2026) பாராட்டுச்சான்றிதழ் வழங்கினார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் செல்வி. கிரண் ஸ்ருதி , மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் உமாமகேஸ்வரி ஆகியோர் உள்ளனர்.




ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச்சேவைகள் துறை, மாவட்ட குழந்தைபாதுகாப்புஅலகுசார்பில்நடைபெற்றபோதைப்பொருள்தடுப்புமற்றும்எதிர்ப்புதினவிழிப்புணர்வுநிகழ்ச்சியில் குழந்தைகள்இல்லம்சார்பில்மாணவ மாணவியர்கள்போதை பொருட்கள்பயன்படுத்துவதால்ஏற்படும்தீமைகள்குறித்து அமைக்கப்பட்டிருந்த கருத்துக்காட்சி அரங்கில் சிறந்த படைப்புகளுக்கு கோப்பை மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (25.06.2026) வழங்கினார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி , மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் உமாமகேஸ்வரி, மாவட்ட வழங்கல் அலுவலர் ராம்குமார் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச்சேவைகள் துறை, மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு சார்பில் நடைபெற்ற போதைப்பொருள் தடுப்பு மற்றும் எதிர்ப்பு தின விழிப்புணர்வு நிகழ்ச்சியில் போதைப்பொருள் தடுப்பு குறித்து "விரைவுத் தகவல் குறியீடு" (QR CODE) அச்சு இடப்பட்ட பனியன் மற்றும் சணல் பைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (25.06.2026) வெளியிட்டார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி , மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் உமாமகேஸ்வரி உட்பட பலர் உள்ளனர்.


# விருத்தாச்சலத்தில் த.வெ.க.வில் இணைந்த அதிமுக மாவட்ட மகளிர் அணி நிர்வாகி



கடலூர் மேற்கு மாவட்ட அதிமுக மகளிர் அணி இணை செயலாளராக இருந்த கல்பனா, தனது ஆதரவாளர்களுடன் அக்கட்சியிலிருந்து விலகி, கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் EMR.S. விஜய் முன்னிலையில் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தார். இந்நிகழ்வில், விருத்தாச்சலம் நகரச் செயலாளர் மங்களம் எம். அப்பாஸ் அலி உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர். புதிய உறுப்பினர்களை வரவேற்ற மாவட்ட நிர்வாகிகள், கட்சியின் வளர்ச்சி மற்றும் அமைப்பு பணிகளை வலுப்படுத்தும் வகையில் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென தெரிவித்தனர்.

# வெனிசுலா இரட்டை நிலநடுக்கத்தில் 32 பேர் உயிரிழப்பு

காரகஸ்: வெனிசுலாவில் அடுத்தடுத்து நிகழ்ந்த சக்திவாய்ந்த இ ர ண் டு நிலநடுக்கங்களில்32பேர் உயிரிழந்ததாகவும், 700-க்கும்மேற்பட்டோர்காயமடைந்துள்ளதாகவும் அந்நாட்டின் இடைக்கால அதிபர் டெல்சி ரோட்ரிக்ஸ் தெரிவித்துள்ளார்.



வியாழக்கிழமை மாலை 6 மணி அளவில் (இந்திய நேரப்படி வெள்ளிக்கிழமை அதிகாலை 3 மணி) ரிக்டர் அளவுகோலில் 7.2 மற்றும் 7.5 என இந்த நிலநடுக்கங்கள் பதிவாகின. முதல் நிலநடுக்கம் தலைநகர் காரகஸில் இருந்து மேற்கே சுமார் 168 கி.மீ. தொலைவில் உள்ள மோரோன் என்றபகுதியைமையமாகக் கொண்டு 22 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்டது.

முதல் நிலநடுக்கம் ஏற்பட்ட ஒரு நிமிடம் கழித்து இரண்டாவது நிலநடுக்கம் ஏற்பட்டது. 7.5 ரிக்டர் அளவுகோள் கொண்ட இந்த நிலநடுக்கம், மோரோனுக்கு தென் மேற்கே 16 கி.மீ. தொலைவில் 10 கி.மீ ஆழத்தில் ஏற்பட்டது. 1900-க்குப் பிறகு வெனிசுலாவைத் தாக்கிய மிகவும் சக்திவாய்ந்த நிலநடுக்கம் இது குறிப்பிடப்படுகிறது.

இந்த நிலநடுக்கத்தை அடுத்து நாட்டு மக்கள் மத்தியில் உரையாற்றிய இடைக்கால அதிபர் டெல்சி ரோட்ரிக்ஸ், நாடு முழுவதும் அவசரநிலை பிறப்பிக்கப்படுவதாக அறிவித்தார். மேலும், மக்கள் அனைவரும் விழிப்புடனும், பாதுகாப்புடனும் இருக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

"இந்த நிலநடுக்கத்தில் குறைந்தது 32 பேர் உயிரிழந்துள்ளனர். 700-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இடிந்து விழுந்த கட்டிடங்களில் மீட்புப் படையினர் தேடுதல் பணியில் ஈடுபட்டு வருவதால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும்.

லா குவைரா மாநிலமே மிகக்கடுமையாகபாதிக்கப்பட்டுள்ளது. டஜன் கணக்கான கட்டிடங்கள் இடிந்து விழுந்துள்ளன. யாரையெல்லாம் காப்பாற்றமுடியுமோஅவர்களைக் காப்பாற்றம் கடினமான பணியில் நாங்கள் ஈடுபட்டுள்ளோம்.

லா குவைரா மாநிலம் ஒரு பெரும் துயரத்தைச் சந்தித்து வருகிறது. மேலும், அது ஒரு பேரிடர் மண்டலமாக மாறியுள்ளது" என டெல்சி ரொட்ரிக்ஸ் தெரிவித்துள்ளார்.

எனினும், இந்த நிலநடுக்கம் காரணமாக ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்திருக்கக்கூடும் என்று அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தனது கணிப்பை வெளியிட்டுள்ளது.

நிலநடுக்கங்களால் பாதிக்கப்பட்டுள்ள வெனிசுலாவுக்கு உதவ அமெரிக்க அரசின் அனைத்து அமைப்புகளுக்கும்தான் உத்தரவிட்டுள்ளதாக அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடக பதிவில், "வெனிசுலா நாட்டு மக்கள் மீது தாக்கிய இரண்டு பெரிய நிலநடுக்கங்களும் மிகப் பெரிய அளவில் இருந்தன. அவை பேரழிவை ஏற்படுத்தும் வகையிலானவை. வெனிசுலாவுக்கு உதவ அமெரிக்கா விருப்பத்துடனும் தயாருடனும் உள்ளது. விரைவாகச் செயல்பட தயாராக இருக்குமாறு எங்கள் அ ர சா ங் க த் தி ன் அனைத்து அமைப்புகளுக்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். எங்கள் புதிய மற்றும் சிறந்த நண்பர்களுக்கு நாங்கள் உறுதுணையாக இருப்போம்" என தெரிவித்துள்ளார்.

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள வெனிசுலாவுக்கு சாத்தியமான அனைத்து உதவிகளையும் வழங்க இந்தியாதயாராகஇருப்பதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "வெனிசுலாவில் ஏற்பட்ட க டு மை ம யா ன நிலநடுக்கங்களால் ஏற்பட்டுள்ள பேரழிவு ஆழமான துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்திய மக்களின் சார்பில், வெனிசுலா அரசாங்கத்துக்கும் மக்களுக்கும், குறிப்பாகத் தங்கள் அன்புக்குரியவர்களை இழந்த குடும்பத்தி னருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையப் பிரார்த்திப்பதோடு, இக்கடினமான சூழலில் பாதிக்கப்பட்ட அனைவருடனும் நாங்கள் உறுதுணையாக நிற்கிறோம். சாத்தியமான அனைத்து உதவிகளையும் வழங்க இந்தியா தயாராக உள்ளது" என தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடியின் இந்த அறிவிப்புக்கு வெனிசுலா இடைக்கால அதிபர் டெல்சி ரோட்ரிக்ஸ் நன்றி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "வெனிசுலாவில் ஏற்பட்ட கடுமையான நி ல ந டு க் க ங் க ளி ன் விளைவாகத் துயரமான சூழல் நிலவும் வேளையில், பிரதமர் நரேந்திர மோடி தனது இரங்கலையும், நிவாரணப் பணிகளுக்கு ஆதரவளிப்பதற்கான இந்தியாவின் விருப்பத்தையும் வெளிப்படுத்தி உள்ளார். இதை நாங்கள் மனதார வரவேற்கிறோம்.

கடினமான காலங்களில் எங்கள் மக்களிடையே நிலவும் ஒத்துழைப்பு உணர்வுக்கு ஏற்ப இந்தியாவின் இந்த அறிவிப்பு அமைந்துள்ளது. சர்வதேச அளவில் அளிக்கப்படும் இத்தகைய ஆதரவை நாங்கள் அங்கீகரிப்பதோடு, எங்களுக்குக் கிடைத்துள்ள இந்த ஆதரவு உணர்வுகளுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்" என தெரிவித்துள்ளார்.

# கோவை ஆர்.எஸ்.புரம் பகுதியில் ஸ்டைலோரி தனது முதல் கிளையை துவக்கியுள்ளது

## பிரபல திரைப்பட நடிகை சஞ்சனா ஏ.கே. ரிப்பன் வெட்டியும், குத்துவிளக்கேற்றி வைத்தும் திறந்து வைத்தார்



என்ஏசி ஜுவெல்லர்ஸ் நிறுவனத்தின் நவீன ஆபரணப் பிராண்டான ஸ்டைலோரி, கொங்கு மண்டலத்தில் தனது வர்த்தகவிரிவாக்கத்தின் ஒரு பகுதியாக கோவை ஆர்.எஸ்.புரத்தில் முதல் விற்பனை நிலையத்தை துவக்கியுள்ளது. இது இந்நிறுவனத்தின் மூன்றாவது சில்லறை விற்பனை நிலையமாகும். புதிய கிளையை நடிகை சஞ்சனா ஏ.கே. திறந்து வைத்தார்.

ஆர். எஸ். புரத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ள இந்த விற்பனை நிலையத்தில், சான்றளிக்கப்பட்ட 92.5 வெள்ளி ஆபரணங்கள், ஐஎஸ்ஐ சான்றளிக்கப்பட்ட ஆய்வக வைரங்கள் மற்றும் பிஐஎஸ் ஹால்மார்க்பெற்ற9காரட்தங்க ஆபரணங்கள் வாடிக்கையாளர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. நவீன வடிவமைப்பு, வெளிப்படையான விலை நிர்ணயம் மற்றும் நிபுணர்களின் ஆலோசனையுடன் சிறப்பான கொள்முதல் அனுபவத்தை வழங்கும் வகையில் இந்த நிலையம் வடிவமைக்கப்பட்டுள்ளதாக நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஸ்டைலோரி மற்றும் நாக் ஸ்டுடியோஸ் நிறுவனத்தின் நிறுவனரும், என்ஏசி ஜுவல்லர்ஸின் நிர்வாக இயக்குநருமான ஆனந்த ராமானுஜம் செய்தியாளர்களிடம் கூறியதாவது.."தரம், கைவினைத்திறன் மற்றும் மதிப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கும் முக்கிய சந்தையாக கோவை இருந்து வருகிறது.ஆர்.எஸ்.புரம் வழியாககொங்குமண்டலத்தில் நுழைவது ஸ்டைலோரியின் வளர்ச்சிப் பயணத்தில் முக்கிய மைல்கல்லாகும். சான்றளிக்கப்பட்ட வெள்ளி, ஆய்வக வைரங்கள் மற்றும் 9 காரட் தங்க ஆபரணங்களை ஒரே இடத்தில் வழங்குவதன் மூலம், வடிவமைப்பு, தரம் மற்றும் வெளிப்படைத்தன்மையை ஒருங்கிணைக்கும் புதிய அனுபவத்தை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறோம்" என்றார். நிகழ்ச்சியில் பேசிய நடிகை சஞ்சனா ஏ.கே., "வெள்ளி, ஆய்வக வைரம்,தங்க ஆபரணங்கள் எனஅனைத்துதரப்பு வாடிக்கையாளர்களின் விருப்பங்களையும் பூர்த்தி செய்யும் வகையில் ஸ்டைலோரி தயாரிப்புகள் உள்ளன. வடிவமைப்பும், விலை நிர்ணயமும் இன்றைய தலைமுறையினரின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப அமைந்துள்ளன" என்றார். இந்த நிகழ்ச்சியில் என்ஏசி ஜுவல்லர்ஸின்தலைவர் அனந்த பத்மநாபன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# Rahul Gandhi backing CJP? Congress MP slams Pradhan's 'Bteam of terrorists' remark

*Congress leader Rahul Gandhi on Thursday launched a sharp attack on Union Education Minister Dharmendra Pradhan over his remarks on those protesting over exam irregularities, demanding that the minister apologise to the country's youth and step down over what he described as his failures.*



*The row erupted after the Cockroach Janta Party (CJP) shared an interview clip showing Pradhan referring to the outfit as a "B team of terrorists".*

*"Immediately apologize to millions of youth"*

*Reacting to the controversy, Rahul Gandhi accused the government of showing arrogance towards young people who are raising concerns about their future and seeking accountability. Also read | CJP's Abhijeet Dipke slams Pradhan's 'terrorist' remark, says minister has 'blood of 17 students on his hands' In a strongly worded statement, the Leader of Opposition in the Lok Sabha said, "Drowned in the arrogance of power, the Modi government has now reached a point where the Education Minister is calling students—who are merely demanding their rights, fair examinations, and a secure future—"terrorists."*

*"Dharmendra Pradhan, immediately apologize to the millions of youth in this country and resign for your failures. As for me—go ahead and attack me as much as you want. I said it in Kota, and I say it again: This education system has today become nothing but an extortion racket. I won't let it continue like this. Ensuring every child gets affordable, quality education and fair examinations—I will never stop raising this voice," Rahul further added.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.